# தமிழகம்

## 'குருஷேத்ரா' விருது

- சென்னை அண்ணா பல்கலைக்கழகம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் தமிழகத்தை சேர்ந்த சாதனையாளர்கள் 5 பேருக்கு ஆண்டுதோறும் 'குருஷேத்ரா' எனும் விருதை வழங்கி கவுரவிக்கிறது.
- இதில், 2017-ஆம் ஆண்டு விருதுப் போட்டிக்காக எளியமுறையில் செங்கல் அறுக்கும் கருவியை உருவாக்கிய திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை புதுத்தெரு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் 8-ஆம் வகுப்பு மாணவி இரா. ஆர்த்திக்கு 'குருஷேத்ரா' விருது வழங்கப்பட்டது.
- அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் இரா. ஆர்த்தி விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். (பிப்ரவரி 28)

## கிரீன்கோ வெண்கலப் பதக்கம்

- ரயில்வே துறையில் முதல்முறையாக தெற்கு ரயில்வேயின் கீழ் செயல்பட்டு வரும் பெரம்பூர் கேரேஜ் மற்றும் வேகன் பணிமனைக்கு இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) சார்பில் சுற்றுச்சூழல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.
- ரயில்வேக்கு சொந்தமான இடங்களில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கையை ரயில்வே துறை எடுத்து வருகிறது.
- குறிப்பாக, மின் சிக்கனத்துக்காக குறைந்த மின்சாரத்தை பயன்படுத்தும் மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.
- ரயில் பெட்டிகள் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தினமும் சுமார் 3 லட்சம் லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. இந்த தண்ணீர் மறுசுழற்சி செய்யப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.
- இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சூழல் பணிகளை பாராட்டி கிரீன்கோ வெண்கலப் பதக்கம் வழங்கப் பட்டது. (மார்ச் 1)

## முதல் பெண் இயக்குனர்

- எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் முதல் பெண் இயக்குனராகவும், அதிகாரி அல்லாத சுயேச்சை இயக்குனராகவும், எல்.விக்டோரியா கவுரி நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்திய கப்பல் துறை அமைச்சகம் இவரை நியமித்துள்ளது.
- இவர் 3 ஆண்டுகள் இப்பதவியை வகிப்பார். (மார்ச் 2)

## டெங்கு நோயை தடுக்கும் பாக்டீரியா

- டெங்கு நோயை தடுக்கும் உல்ஃபாசியா எனும் பாக்டீரியாவை புதுச்சேரியிலுள்ள

## மீண்டும் தபால் நிலையம்



- தனுஷ்கோடியை புயல் தாக்கி 53 ஆண்டுகள் ஆனநிலையிலும் பொதுமக்கள் வாழத் தகுதியற்ற இடம் என முத்திரை குத்தப்பட்டு , மின்சாரம், மருத்துவம், குடிநீர் என எவ்விதமான அடிப்படை வசதிளும் இல்லாமல் முன்னூறுக்கும் மேற்பட்ட பாரம்பரிய மீனவக் குடும்பங்கள் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர்.
- இந்நிலையில் ராமேசுவரம் முகுந்தராயர் சத்திரத் திலிருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கு புதியதாக தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு திறக்கும் நிலையில் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து 53 ஆண்டுகள் கழித்து மீண்டும் தனுஷ்கோடியில் தபால் நிலையம் திறக்கப்பட்டது.
- ராமேசுவரம் கிழக்கு என்ற பெயரில் துவங்கப்பட்டுள்ள தபால் நிலையம் தனுஷ்கோடி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கும். (பிப்ரவரி 22)

## பெண் சக்தி விருது



- சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு யோகா கலையை வளர்த்து வரும், தமிழகத்தின் நாமக்கல்லை சேர்ந்த 97 வயதான ஞானம்மாள் உட்பட, தமிழகத்தை சேர்ந்த நால்வருக்கு பெண் சக்தி விருது வழங்கப்பட்டது.
- இவரைத் தவிர, பெண்கள் சுயஉதவி குழுக்களை நடத்தி வரும் ஹேண்ட் இன் ஹேண்ட் அமைப்பின் தலைவர் டாக்டர் கல்பனா சங்கர், பட்டுப்புடவை நெய்வது தொடர்பாக ஏழை, எளிய பெண்களுக்கு பயிற்சி அளித்து வரும் கல்யாணி பிரமோத் பாலகிருஷ்ணன், டாக்டர் நந்திதா ஷா ஆகியோர் தமிழகத்தில் இருந்து இந்த விருதை பெற்றனர். (மார்ச் 10)

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் மோனாஸ் பல்கலைக்கழகம் இணைந்து கண்டுபிடித்துள்ளன.

- இந்த பாக்டீரியாவானது, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் ஜிகா நோய்களைப் பரப்பும் ஏடீஸ் வகை கொசுக்களினுள் செலுத்தப்படுகிறது. (மார்ச் 3)

### 12-ஆம் நூற்றாண்டு தடுப்பணை கண்டுபிடிப்பு

- திண்டுக்கல் மாவட்டத்தின் மேற்கு எல்லையில் அமராவதி ஆறு ஓடுகிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலையில் தமிழக-கேரள எல்லையில் உள்ள மஞ்சம்பட்டியில் அமராவதி ஆறு உற்பத்தியாகிறது. பின் 282 கிலோமீட்டர் தூரம் ஓடி திருமுக்கூடலில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது.
- திண்டுக்கல் மாவட்ட எல்லையான சாமிநாதபுரம் அருகில், இந்த ஆற்றின் குறுக்கே பழங்கால தடுப்பணை இருப்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. (மார்ச் 2)

### களப்பிரர்கள் காலத்தின் புதிய நாணயம்

- தமிழக வரலாற்றில் இருண்ட காலமான களப்பிரர்கள் காலத்தை சேர்ந்த புதிய நாணயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- அதன் மூலம் மூவேந்தர்கள் ஆண்ட தமிழகத்தை களப்பிரர்கள் நீண்டகாலம் ஆட்சி செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது.
- 8-ஆம் நூற்றாண்டை சேர்ந்த வேள்விக்குடி செப்பேட்டில் களப்பிரர்களை பற்றிய செய்தி உள்ளது.
- ஜடாவர்மன் பராந்தக பாண்டிய மன்னரால் அது வெளியிடப்பட்டது. (மார்ச் 9)

### சென்னை ஐஐடி-க்கு 62-வது இடம்

- ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அவற்றுக்கான தரவரிசையை பல்வேறு அமைப்புகள் வெளியிட்டு வருகின்றன.
- இதுபோல டைம்ஸ் என்ற அமைப்பின் 2017-ஆம் ஆண்டுக்கான ஆசிய அளவிலான தரவரிசை பட்டியல் இப்போது வெளியிடப்பட்டுள்ளது.
- இதில் கடந்த ஆண்டைப் போலவே 100 இடங்களுக்குள் 8 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன.
- இந்த பட்டியலின் முதல் இடத்தில் சிங்கப்பூர் பல்கலைக்கழகம் உள்ளது.
- சென்னை ஐஐடி கடந்தை ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் 62-வது இடத்தை பெற்றுள்ளது. (மார்ச் 15)

### காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பூங்கா

- காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பட்டுப் பூங்கா அமைக்கப்படும் என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.
- ரூபாய் 83.83 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம் தொழில் துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட உள்ளது. (மார்ச் 6)

### இந்தியா-ருவாண்டா ஒப்பந்தங்கள்

- ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள ருவாண்டா, உகாண்டா ஆகிய இரு நாடுகளுக்கு துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி 5 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.
- ருவாண்டா சென்ற அன்சாரி அந்நாட்டின் தலைநகர் கிகாயில் அந்நாட்டின் அதிபர் பால் ககாமேவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.
- அப்போது விமானப் போக்குவரத்து, விசா நடைமுறைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவை தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே 3 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (பிப். 22)

### மிக தூய்மையான கிராமம்

- ஆசிய கண்டத்தின் மிக தூய்மையான கிராமமாக மேகாலயா மாநிலத் தலைநகரான ஷில்லாங்கின் அருகே பசுமை சூழ காட்சிதரும் மௌனாங் என்ற கிராமம் தேர்வாகியுள்ளது.
- இங்கு வசிக்கும் மக்கள் சுற்றுச்சூழலை காக்கும் வகையில், சுகாதாரத் தையும், பசுமையையும் பேணி காத்து வருகின்றனர். குப்பைகளை வீதியில் வீசுவரைத் தவிர்த்து குப்பை கூடைகள் வைத்து சேகரித்து வருகின்றனர்.
- இவற்றில் மக்கும் குப்பைகள் விளைநிலங்களில் உரமாகப் பயன்படுத்தப் படுகிறது. பிளாஸ்டிக் போன்ற மக்காத குப்பைகள் ஊருக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. (பிப்ரவரி 22)

### ஏவுகணை தொழில்நுட்ப மேம்பாடு

- இந்தியாவில் ஏவுகணை தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் எல்&டி நிறுவனம், ஐரோப்பிய பாதுகாப்புத் துறை நிறுவனமான எம்.பி.டி.ஏவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது.
- உள்நாட்டில் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பல்வேறு வகையான ஏவுகணைகளை வடிவமைத்து இந்தியாவிலேயே தயாரிக்கும் வகையில் இந்தக் கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. (பிப்ரவரி 21)

### முதல் ஹெலிகாப்டர் தளம்

- இந்தியாவின் முதல் ஹெலிகாப்டர் தளத்தை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் அசோக் கஜபதி டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- மினி ரத்னா அந்தஸ்து பெற்ற மத்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமான பவன் ஹான்ஸ் நிறுவனம் ரூ.100 கோடி முதலீட்டில் இந்த ஹெலிகாப்டர் தளத்தை உருவாக்கி உள்ளது.
- மே மாதம் முதல் இந்த தளம் முழுவீச்சில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தளம் 150 பயணிகளை கையாளும் திறன் கொண்டது.
- 16 ஹெலிகாப்டர்களை பார்க்கிங் செய்யும்

### அதிவேக புல்லட் ரயில் திட்டம்



- இந்தியாவின் முதல் அதிவேக புல்லட் ரயில் திட்டம் கடலுக்கடியில் பயணிக்கும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது.
- தானேவில் இருந்து விரார் வரையிலான சுரங்க ரயில் பாதையில் சுமார் 7 கிலோமீட்டர் வரையிலான பாதை, கடலுக்கடியில் நிறுவப்பட உள்ளது.
- இந்தத் திட்டம் முழுமையான செயல்வடிவம் பெறும்போது கடலுக்கடியில் பயணிக்கும் இந்தியாவின் முதல் புல்லட் ரயில் என்ற பெருமையைப் பெறும். (பிப்ரவரி 22)